**செய்தி வெளியீடு எண்:716** **நாள்: 26.10.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (26.10.2017) திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில்
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு.**வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்
திருமதி. **எஸ். வளர்மதி** அவர்களே!

வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
அரசுச் செயலளர்
திரு. **வெங்கடேசன்** அவர்களே!

மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **டி.ரத்தினவேல்** அவர்களே!
திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ப.குமார்** அவர்களே!
பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ஆர்.பி.மருதராஜா** அவர்களே!

மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர்
திரு. **ஆர். சந்திரசேகர்** அவர்களே!
முசிறி சட்டமன்ற உறுப்பினர்
திரு. **எம். செல்வராசு** அவர்களே!

மணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்
திருமதி. **எம்.பரமேஸ்வரி** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!
அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **கு. ராஜாமணி** அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர்
திரு.ஆர். வைத்தியலிங்கம் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
தலைமைக் கழக நிர்வாகிகளே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி, கலை, விவசாயம், தொழில், ஆன்மிகம், சுற்றுலா என பன்முக சிறப்புகள் கொண்ட ஒரு முன்னோடி மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சி மலைக்கோட்டை குகையில் ‘சிரா’ என்ற சமணத்துறவி தங்கி தவமிருந்ததால் இது
‘**திரு – சிராப் – பள்ளி**’ எனப் பெயராகி..
அது காலப்போக்கில் திருச்சிராப்பள்ளி
என்று மருவியது என்பர்.

சேரர், சோழர், பாண்டியர்களாலும், விஜயநகர பேரரசர்களாலும், பாளையக்காரர்களாலும் ஆளப்பட்டு அடிக்கடி போர்கள் நடந்த இடமாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் விளங்கியிருக்கிறது.

திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லணை முதலாம் நூற்றாண்டில் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. காவிரியில் பெருக்கெடுத்து ஓடும் நீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தடுத்து நிறுத்தி அதை கழனிகளில் பாய்ச்சி டெல்டா மாவட்டங்களை செழிப்படைய செய்த பெருமை கரிகால்சோழனுக்கு உண்டு.
ஆற்றின் குறுக்கே அணைகட்டி, நீரை தேக்கி அதை பாசனத்திற்கு பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை உலகிலேயே முதன்முதலாக கண்டுபிடித்து அதை செயலாக்கியவர் கரிகாலச் சோழன் என்ற தமிழன் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்ற
முதல் இந்தியர் சர்.சி.வி. இராமன் அவர்கள் திருவானைக்காவலில் பிறந்திருக்கிறார்.

மொழிஞாயிறு தேவநேயபாவாணர் அவர்களும், தமிழறிஞர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும், புத்தூர் பிஷப் ஹுபர் பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்துள்ளனர்.

திருவாளர்கள் வ.வே.சு. அய்யர்,
டாக்டர் டி.வி.சுவாமிநாத சாஸ்திரி,
தேச பக்தர் ஆங்கரை ஹாலாசியம்,
திவான்.பி. கலிபுல்லா சாகிம்,
டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், போன்ற
இன்னும் பல விடுதலைப் போராட்ட தியாகிகளை
தமிழ் மண்ணுக்கு வழங்கிய புனித பூமி திருச்சிராப்பள்ளி மாவட்டமாகும்.

திருவாளர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம்,
அய்யம் பெருமாள் கோனார், பொது உடைமை இயக்கத்தலைவர்
தோழர் எம்.கல்யாண சுந்தரம், நடிகவேள் எம்.ஆர்.ராதா,

வயலின் மேதை லால்குடி ஜெயராமன்,
கவிஞர் வாலி, கவிஞர் நா.காமராசன்,
பாடகர் திருச்சி லோகநாதன்,
எழுத்தாளர் சுஜாதா, போன்ற இன்னும்
பல தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும்  பெற்ற மாவட்டம் இது.

1946ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி திருச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்திருக்கிறார்.

ஸ்ரீவரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோயில், மலைக் கோட்டை உச்சி பிள்ளையார் கோவில், அருள்மிகு தாயுமானவர் திருக்கோவில்,

உறையூர் வெக்காளியம்மன் கோயில்,
வயலூர் முருகன் கோயில்,
புனித சூசையச்சர் தேவாலயம்,
தூய வளனார் தேவாலயம்,
எடத்தெரு சகாயமாதா தேவாலயம்,
நத்தர்ஷா பள்ளிவாசல் போன்ற

பல வழிபாட்டு தலங்களாலும்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
ஆன்மிக மணம் கமழும் பூமியாகத் திகழ்கிறது.

லண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு சின்னத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் படம் உள்ளது.

பச்சமலை, புளியஞ்சோலை,  மேலணை, முக்கொம்பு,
அறிஞர் அண்ணா கோளரங்கம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்ட மேலூர் வண்ணத்துப்பூச்சி பூங்கா,
ராணி மங்கம்மாள் கொலு மண்டபம்
போன்ற இன்னும் பல சுற்றுலாத் தலங்களைக் கொண்டது திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விவசாயமும், நெசவும் இம்மாவட்டத்தின் முதன்மையான தொழிலாகும்.
குறிப்பாக உறையூர் பழங்காலத்திருந்து
மஸ்லின் துணிக்கும், சேலைகளுக்கும் பெயர் பெற்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணப்பாறை மாடுகள் உழவுக்கு பெயர் பெற்றதாகும்.

திருச்சிராப்பள்ளியில் இயங்கும் பொன்மலை ரயில்வே தொழிற்சாலை, பாரத மிகுமின் நிறுவனம், துப்பாக்கி தொழிற்சாலை, காகித தொழிற்சாலை போன்றவைகளால் திருச்சிராப்பள்ளி ஒரு தொழில் மாவட்டமாகவும் முன்னேறியிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியில் தங்கம், வெள்ளி, நவமணிகள் மற்றும் செயற்கை கல் ஆகியவற்றால் ஆபரணங்கள் செய்யும் தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

இங்குள்ள சர்க்கரை ஆலைகளும்,
இன்னும் பல சிறு தொழிற்கூடங்களும் போதுமான வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.

இன்னும் பல பழமையும் பெருமையும் கொண்ட
திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரசியல் வரலாற்றிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

குறிப்பாக உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் பொன்மனச் செம்மல், இன்று நூற்றாண்டு விழா காணும் மக்கள் நாயகன் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றில்
பல பக்கங்களை பிடித்திருக்கும் மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்தான்.

அதைப்போல, எங்கள் குல தெய்வம்,
தமிழ்நாட்டின் ஒளிவிளக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வரலாற்றோடும் இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் நீக்கமுடியாத இடத்தை பிடித்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பராயத்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலிற்கு நன்கொடை வழங்கும் பொருட்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கரூரில் தன் சொந்த செலவில் ஒரு மாபெரும் நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

அந்த நாட்டிய நிகழ்ச்சியை நடத்தியவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நாட்டிய நிகழ்ச்சியில் வசூலான தொகை முழுவதையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண குடிலிற்கு நன்கொடையாக வழங்குகிறார்கள்.

அந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கொடை உள்ளத்தைப் பாராட்டி “**பொன்மனச்செம்மல்** ” என்ற பட்டத்தை வழங்குகிறார்கள்.

அதே மேடையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் "**நாட்டிய கலாமணி**"என்ற பட்டத்தையும் வழங்கி திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சிறப்பிக்கிறார்கள்.

நமது கழகத்தின் இரு மாபெரும் தலைவர்களின் குணத்தையும் மனத்தையும் படம் பிடித்துக் காட்டுகிற பட்டங்களை வழங்கியது இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீராமகிருஷ்ண குடில் தான் என்பது இந்த மாவட்டத்திற்கு கிடைத்த கூடுதல் பெருமையாகும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பின்னர் கட்சியின் முதல் பொதுக்குழுவும், முதல் மாநில மாநாடும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்தான் நடந்தது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

போதிய வருவாய் இல்லாத சிறு கோயில்களுக்கு
**ஒரு கால பூஜைக்கு** வகை செய்யும்
புதிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
சமயபுரத்தில்தான் தொடங்கியிருக்கிறார்கள்.

வறுமையின் காரணமாக
2ஆம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாத
நிலைமையில் மாண்புமிகு புரட்சித்தலைவர்
அவர்கள் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார்கள்.

நாடக கம்பெனிக்கு போனால் பிள்ளைகள்
வயிறார சாப்பிடுவார்கள் என்ற எண்ணத்தில்
அவரது தாயார் அவரையும், அவரது அண்ணனையும் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டார்கள்.

குறிப்பிட்ட நாளில் நாடகத்தில் நடிப்பவர்களுக்கு மட்டுமே சாப்பாடு என்பது அங்கு விதிமுறை.
அது தெரியாத சிறுவராக இருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்,
ஒரு நாள் மதிய சாப்பாட்டிற்கு பசியோடு மற்ற நடிகர்களோடு அமர்ந்து விடுகிறார்கள்.

அதை கவனித்த நாடக கம்பெனி மேலாளர் **"இன்றைய நாடகத்தில் நீ இல்லை. ஆகவே உனக்கு சாப்பாடு கிடையாது",**
என்று சொல்லி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை கையைப் பிடித்து இழுத்து வெளியே விட்டுவிடுகிறார்.

அன்று பசியுடன் வெளியேறிய
அந்த கொடுமையான அனுபவம்தான் – சிறுவர் சிறுமிகள், பள்ளிக் குழந்தைகள் வயிறார,
சத்தான உணவு சாப்பிட வேண்டும்
என்ற எண்ணம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மனதில் ஏற்படுத்தியது.

**அதுவே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்த காரணமாக விளங்கியது.**

அத்தகைய அரிய திட்டத்தை அமல்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் காட்டூர் பாப்பாக்குறிச்சியாகும்.

1982ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே பாப்பாக்குறிச்சிக்கு நேரடியாக வருகை தந்து சிறுவர்களோடு சிறுவராய் அமர்ந்து உணவு உண்ட காட்சி இன்று வரலாற்று சிறப்பு மிக்க காட்சியாக நிலைபெற்று விட்டது.

இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மீது
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டிருந்த பாசத்திற்கும், மரியாதைக்கும் மேலும் ஒரு சாட்சி.

1980ஆம் ஆண்டு தமிழ் நாட்டில்,
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களின் ஆட்சி கலைக்கப்பட்ட போது,
அதனைக் கண்டித்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதன்முதலில்

**27.3.1980 அன்று திருச்சிராப்பள்ளி பொதுக்கூட்டத்தில்தான்,**
**மக்களிடத்தில் நேரிடையாக நியாயம்**
**கேட்ட மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

தமிழறிஞர்கள் மீதும், தமிழ் மீதும் மிகப்பெரிய மரியாதை வைத்திருந்தவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
என்பது தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த ஒன்று.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் இரண்டு கோரிக்கைகளை வைக்கிறார்.

தமிழ்நாட்டில் தங்களது ஆட்சிக்காலத்தில்
உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும்
மற்றும் தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்பதுதான்
அந்த கோரிக்கைகள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
**முதலாவதாக சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில், உலகத் தமிழ்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியும்,**

**இரண்டாவதாக, சோழ மண்டலமாம் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தையும் நிறுவி**
**இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றினார்கள்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த
முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் மீது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டிருந்த மரியாதை இதன் மூலம் புலப்படுகிறது.

ஆசியாவிலேயே உயரமான ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் மகாகும்பாபிஷேகத்தை தனது ஆட்சிக் காலத்தில் 25.3.1987ல் நடத்தி, அதில் தனது துணைவியாரோடு கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

1980–ல் நடந்த சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம்
துறையூரில் ஏரி தூர்வாராமல் உள்ளது என
அந்த ஊர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சரோஜா அவர்கள் பேச, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்த ஏரியை நேரில் சென்று ஆய்வுசெய்து ஏரியை தூர்வார நடவடிக்கை எடுத்தார்கள். அதனால்தான் **அந்த ஏரிக்கு 'எம்.ஜி.ஆர் ஏரி' என்று பெயர் வந்தது.**

அதைப்போல.. அதே ஆண்டு நடந்த சம்பவம் ஒன்று,
மணச்சநல்லூர் அருகில் உள்ள தத்தமங்கலம் கிராமத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது, கிராமத்தின் உள்ளே செல்ல சரியான சாலை வசதி இல்லை என்பதை அறிந்து கொண்டு, சென்னை வந்ததும் அந்த கிராமத்திற்குச் செல்ல சாலை வசதி செய்து கொடுத்தார்கள். அதனால்தான் அந்த சாலைக்கு **'எம்.ஜி.ஆர். ரோடு' எ**ன்று பெயர் ஏற்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியை தேர்ந்தெடுத்து அதில் சட்டமன்ற வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டது

இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பெருமைகளுக்கெல்லாம் கிரீடம் வைத்தது போல் ஆகிவிட்டது.

**“தமிழ்நாட்டின் ஒவ்வொரு தொகுதியும்**
**என்னுடைய தொகுதிதான் என்றாலும்,**
**இது எனது சொந்த தொகுதியாகும்”**, என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

**“நான் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்தாலும், என்னுடைய எண்ணமெல்லாம் திருச்சி மலைக் கோட்டையைச் சுற்றிதான் இருக்கிறது”,** என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு புகழாரம் சூட்டியிருக்கிறார்கள்.

**“நீங்கள் வேறு நான் வேறு அல்ல**
**உங்களால் நான், உங்களுக்காக நான்;**
**உங்கள் அன்புச் சகோதரி நான்;**
**ஸ்ரீரங்கம் எனது மூதாதையர்கள் ஊர்,**
**அந்த வகையில் ஸ்ரீரங்கம் மண்ணுக்கும்,**
**மக்களுக்கும் சொந்தக்காரி நான்.”**
என்று சூளுரைத்து செயல்பட்டவர்
மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு செய்திட்ட சாதனைகள் பலவற்றை உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் வெல்லமண்டி நடராஜன் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள்.

அவற்றில் ஒரு சிலவற்றை இந்த இனிய வேளையில் உங்களிடையே பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம்.

ஸ்ரீரங்கம் வெள்ளி திருமுத்தம் கிராமத்தில் ஒரே நேரத்தில் 1000 பக்தர்கள் தங்கும் யாத்ரி நிவாஸ்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக நவலூர் குட்டப்பட்டில் 25 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 100 கோடி மதிப்பில் தேசிய சட்டப்பள்ளி மற்றும்
ரூபாய் 40 கோடி மதிப்பில் மகளிருக்கென தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பாலிடெக்னிக் கல்லூரி இப்படி அதிகமான கல்லூரிகளைக் கொடுத்து இந்த மாவட்ட மக்கள் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்கள் குறைந்த

செலவிலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கம்பரசம்பேட்டை அருகே காவிரி ஆற்றின் குறுக்கே ரூபாய் 32 கோடி மதிப்பில் தடுப்பணை.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலம் ரூபாய் 1650 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இந்த மாவட்டத்தில் பெற்றிருக்கின்றார்கள்.

திருச்சிராப்பள்ளியில் ரூபாய் 100 கோடி மதிப்பில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை,
கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூபாய் 75 கோடி மதிப்பில் நேப்பியர் பாலம் வடிவில் 4 வழிச்சாலை உயர்மட்ட பாலம்.

அந்தநல்லூர், மணிகண்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 212 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் ரூபாய் 49 கோடிமதிப்பீட்டில் காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்ட கூட்டு குடிநீர் திட்டம்.

கள்ளிக்குடி கிராமத்தில் ரூபாய் 77 கோடி மதிப்பில் காய்கனி மற்றும் மலர்களுக்கான மத்திய வணிக வளாகம்.

திருச்சிராப்பள்ளி ரயில்வே சந்திப்பு அருகே ரூபாய் 82 கோடி மதிப்பில் உயர்மட்ட சுற்றுப்பாலம்.

காவிரி தென்கரை ஓயாமாரி அருகே ரூபாய் 53 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களை
மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா அவர்கள் கோடை மழையாய் கொட்டித் தந்திருக்கும் நலத்திட்டங்கள்.
மடைதிறந்த வெள்ளமென வாரி வழங்கியிருக்கும் நலத்திட்ட உதவிகள், வற்றாத ஜீவ நதியாய் வழங்கியிருக்கும் வளர்ச்சித்திட்டங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்களை
மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது.

இப்போதும் அந்த தொலைநோக்குத் திட்டங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்களுக்கு பெரும்பலனை அளித்து வருகிறன்றன.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின்

முதல் அத்தியாயத்திலும்,
இரண்டாவது அத்தியாயத்திலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அதிக இடத்தைப் பிடித்திருக்கிறது.

அந்த மகத்தான தலைவர்களின் வழியில்
மூன்றாம் அத்தியாயமாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நாங்கள்
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை அத்தலைவர்களின் எண்ணத்தையும் உங்கள் விருப்பத்தையும் மனதில் வைத்துத்தான் திட்டங்கள் வகுத்திருக்கிறோம்.

அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்
கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு அரசு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன.

ஏனென்று சொன்னால் இதை இந்த நேரத்திலே சொல்வது பொறுத்தமாக இருக்குமென்று கருதுகின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் இந்த ஆட்சியிலே என்ன திட்டம் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது, என்ன நன்மை கிடைத்திருக்கின்றது என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கின்றார். செய்தியாளர்களிடம் பேட்டி கொடுக்கின்றபொழுது நம்முடைய கட்சி பற்றியும், ஆட்சி பற்றியும் விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார். அதேபோல, எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இதைப்பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்வதற்காக இன்றைக்கு புள்ளிவிவரத்தோடு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் நடைபெறுகின்ற பணிகளை நாங்கள் புள்ளிவிவரத்தோடு சொல்கின்றோம், அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு
செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள
விவசாயக் கடன் 279 கோடியே 87 லட்சம்
ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம்
63 ஆயிரத்து 876 விவசாயிகள் பயன்
பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணினி வழங்கும்
திட்டத்தின் கீழ் 251 கோடி ரூபாய் செலவில்
மாணாக்கர்களுக்கு 1 லட்சத்து 79 ஆயிரத்து
242 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழை பெண்களுக்கு திருமண உதவி
வழங்கும் திட்டத்தின் கீழ்
நிதி உதவியாக 31 ஆயிரத்து 119
ஏழை பெண்களுக்கு110 கோடியே

10 லட்சம் ரூபாயும், 124.45 கிலோ கிராம்
தங்கமும் வழங்கப்பட்டுள்ளன.

250 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
12 ஆயிரத்து 693 சூரிய சக்தியுடன் கூடிய
பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ் 2210 குக்கிராமங்களில்
132 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
13 ஆயிரத்து 565 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ்
241 கோடியே 82 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் 19 ஆயிரத்து 244 வீடுகள்
கட்டி வழங்கப்பட்டுள்ளன.

26 ஆயிரத்து 144 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு
762 கோடி ரூபாய் நேரடி வங்கிக் கடன்
வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகத்தின் சார்பில்
77 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
8 இடங்களில் புதிய மின் திட்டங்கள்
செயல்படுத்தப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம்
மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ்
528 கோடியே 45 லட்சம் ரூபாய் செவில்
சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன.

கம்பரசம்பேட்டையில் மொழிப்போர்
தியாகி கீழப்பளுவூர் சின்னசாமிக்கு
சிலை அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா
அவர்களால் 8.2.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

குடிமராமத்து பணிகள் திட்டத்தின் கீழ் 4 கோடியே
3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 58 பணிகள் முடிவுற்றுள்ளன. நடப்பு ஆண்டில்
9 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 75 பணிகள்
நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளுக்கு விலையில்லா
வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ்

261 ஏரி மற்றும் குளங்களின் மூலம்
19 ஆயிரத்து 394 விவசாயிகளுக்கு
9 லட்சத்து 86 ஆயிரத்து 187 கன மீட்டர்
வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு
இடுபொருள் நிவாரணத் தொகையாக
63 கோடியே 95 லட்சம் ரூபாய்
வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 1 லட்சத்து 4 ஆயிரத்து
82 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

இவை தவிர, இன்று, தமிழ்நாடு மின் உற்பத்தி
மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில்
197 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான
3 திட்டங்கள் உட்பட 212 கோடி ரூபாய்
மதிப்பிலான 13 பணிகள் என்னால்
தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில்
350 கோடி ரூபாய் செலவில் தார் சாலை
அமைக்கும் பணி உட்பட 457 கோடியே
31 லட்சம் ரூபாய் மதிப்பிலான 45 பணிகளுக்கு
இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில்
32 ஆயிரத்து 361 பயனாளிகளுக்கு
101 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பிலான
நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட உள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல்
இன்று வரை மாநிலம் முழுவதும்
நிறைவடைந்த 10 ஆயிரத்து 497
கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பிலான
34 ஆயிரத்து 926 பணிகளைத்
தொடங்கி வைத்தும்

3 ஆயிரத்து 529 கோடியே 51 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 6 ஆயிரத்து 766 பணிகளுக்கு

அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 14 ஆயிரத்து 26 கோடியே
83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
41 ஆயிரத்து 692 பணிகள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
**பாசத்திற்குரிய மாவட்டம்**
திருச்சிராப்பள்ளி மாவட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
**நேசத்திற்குரிய சொந்த மாவட்டம்;**

**ஒட்டு மொத்தத்தில்.. ஆண்டாண்டு காலமாக**
**இங்கே அசைக்க முடியாத ஆன்மிக கோட்டையாக நிற்கும் மலை கோட்டையைப்போல..**

**இனி எத்தனை காலமானாலும்**
**அசைக்க முடியாத அனைத்திந்திய அண்ணா**
**திராவிட முன்னேற்றக்கழக கோட்டையாக**
**இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் விளங்கும்.**

இரு பெரும் தலைவர்களின் திட்டங்கள்
அதற்கு வழிவகுக்கும்..
அவர்களுக்குப் பிறகு அவர்களின் வழியில் வந்த இந்த அரசின் திட்டங்கள்
திருச்சிராப்பள்ளியை மேலும் வளமாக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
மக்களுக்காக உருவான கட்சி..
மக்களுக்காக உழைக்கும் கட்சி..
மக்களுக்காகவே தியாகம் செய்யும் கட்சி.

உங்கள் காதுகளில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எழுச்சி குரலும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வீரக்குரலும்தான் எப்போதும் ஒலிக்க வேண்டும்.
உங்கள் கண்களுக்கு இந்த இருபெரும் தலைவர்களின் அன்பு முகங்கள்தான் தெரிய வேண்டும்.

**‘என் கடன் பணி செய்து கிடப்பதே’** என்பது போல்..
எப்போதும் மக்கள் பணி ஆற்றுங்கள்.

**“காட்டில் நிலவாய்**
**கடலில் மழையாய் பிறந்தால்**
**யாருக்கு லாபம்;**
**பகையில் துணையாய்**
**பசியில் உணவாய் இருந்தால்**
**ஊருக்கு லாபம்’’ என்ற**
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளை மனதில் ஏற்றுங்கள்.

கழக கண்மணிகளாகிய நீங்கள்..
ஒத்த கருத்துடன்.. ஒற்றுமையாக செயலாற்றுங்கள். உங்கள் ஒற்றுமைதான்.. இந்த கட்சியையும், ஆட்சியையும் வலிமைப்படுத்தும்.

**“ஒருதாய் மக்கள் நாமென்போம்**
**ஒன்றே எங்கள் குலமென்போம்—தலைவன்**
**ஒருவன்தான் என்போம்.**
**சமரசம் எங்கள் வாழ்வென்போம்’’ என்று**
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
தன் பாடலின் மூலம் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.
இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எஃகு கோட்டையாக இருக்கிறது என்றால் அதற்கு தொண்டர்களின் ஒன்றுமைதான் முழுக் காரணம் என்பது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும் தெரியும்.

நமக்குள் பிளவை உண்டாக்கும்
மாற்று சக்திக்கு ஒரு காலமும் இடம் கொடுக்காத அளவிற்கு நாம் ஒற்றுமையாக மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சியினர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஆதாரம் இல்லாத குறைகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

குறைகூறுபவர்கள் குறைகூறிக் கொண்டுதான் இருப்பார்கள். குறைகளுக்கு அவர்களால் தீர்வு சொல்லத் தெரியாது.

இதைக் கூறுகின்ற போது
எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நகரில் அவர் மிகப்பிரபலமான
அனுபவமிக்க ஓவியர். அவரிடம்
ஓவியம் பயிலுவதற்கு அனைத்து இடங்களில்
இருந்தும் மாணவர்கள் வந்து செல்வார்கள்.

ஒரு சிலர் அவரிடம் அங்கேயே தங்கியிருந்து
ஓவியம் கற்றுச் செல்வார்கள். அவ்வாறு
தங்கியிருந்து ஓவியம் பயின்ற ஒரு இளைஞன்,
பயிற்சி முடிந்ததும், தன் குருவான
ஓவியரிடமிருந்து விடைப்பெற்று கிளம்பினான்.

**தான் கற்றுக் கொண்ட ஓவியத் திறன்
குறித்து சுய மதிப்பீடு செய்து பார்க்கும்
ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டது.**

எனவே கற்பனைத் திறனில் ஒரு
காட்சியை உருவகம் செய்து அதை
ஒரு ஓவியமாக வரைந்தான்.
இதுப்பற்றி பிறரின் கருத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டது.

அதனால் அந்த ஓவியத்தை ஊரின் மையப் பகுதியில் அனைவரின் பார்வைக்கு வைத்தான்.
பிறகு அதில் இதனை பார்ப்பவர்கள்
**இதில் ஏதாவது தவறு கண்டீர்களானால்
அந்த இடத்தில் (X) தப்பு என்று மார்க் செய்யவும் என்று எழுதி** அங்கே ஒரு பேனாவையும் கட்டி
தொங்க விட்டுச் சென்றான்.

பிறகு சிறிது நாள் கழித்து, தனது ஓவியத்தை பற்றி மக்கள் விமர்சனத்தை அறிய அந்த இளைஞன் அந்த இடத்திற்கு சென்றான்.
**ஓவியத்தில் அந்த தப்பு மார்க் இல்லாத இடமே இல்லை என்ற அளவுக்கு எங்கு பார்த்தாலும்
அந்த தப்பு மார்க் இருந்தது.**

**ஒரு சிலர் இதெல்லாம் ஓவியமா இதை
வைத்து அபிப்ராயத்தைக் கேட்க
வந்து விட்டாய்** என்று எழுதியிருந்தார்கள்.
அதை கண்டு ஓவியன் மிகவும் வருத்தமடைந்தான்.
தான் ஒரு திறமையான ஓவியன் அல்ல
என மனமுடைந்தான்.

**அவன் உடனே அந்த ஓவியத்தை
எடுத்துக் கொண்டு சென்று
தனது குருநாதரிடம் காண்பித்தான்.**

உடனே குரு
**நீ ஒரு சிறந்த ஓவியன்.**
**மற்றவர்களால் குறை கண்டு பிடிக்க**
**முடியாத அளவுக்கு உன்னால் ஓவியம்**
**வரைய முடியும்** என ஊக்குவித்தார்.

**பிறகு அந்த இளைஞனை**
**மற்றொரு ஓவியம் வரையும்படி கூறி**
**அவனை மேலும் ஊக்குவித்தார்.**

அவனும் மற்றொரு ஓவியம் ஒன்றினை
வரைந்தான். குரு கூறியபடியே அந்த ஓவியத்தை
பொது இடத்தில் வைத்தான்.

இப்பொழுது அவன் அந்த ஓவியம் அருகில்
**இந்த ஒவியத்தில் யாரேனும் ஏதேனும்**
**தவறுகள் கண்டுபிடித்தால், இதனருகே**
**உள்ள பிரஷ் மூலம் சரி செய்யவும்.**
**இவ்வாறு ஓவியத்தில் குறைகளை கண்டுபிடித்து**
**அதனை சரிசெய்பவர்களுக்கு**
**என்னுடைய மனமார்ந்த**
**நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்**
என்று ஒரு அட்டையில் எழுதி
ஓவியத்தின் அருகில் தொங்கவிட்டான்.
மேலும் அருகிலேயே ஒரு தூரிகையையும், பெயிண்டையும் வைத்து விட்டு
சென்றான்.

பிறகு சிறிது நாட்கள் கழித்து அந்த இடத்திற்கு
குருவுடன் அந்த இளைஞன் வருகிறான்.
**ஓரே ஆச்சரியம் ஓவியம் எந்த இடத்திலும்**
**திருத்தப்படவில்லை.**

அப்பொழுது அந்த குரு கூறுகிறார்.
**உலகத்திலேயே ஒரு பணியை செய்வது கடினம். ஆனால் விமர்சனம் செய்வது சுலபம் –**

**எனவே நீ முதலில் வரைந்த ஓவியத்தை**
**குறை கூறு என்றவுடன் அனைவரும் அதனை**
**விமர்ச்சனம் செய்தனர்.**

**ஆனால் ஓவியத்தில் உள்ள குறையை**
**கண்டுபிடித்து நிவர்த்தி செய்யுங்கள்**

**என்று தவறை கண்டுபிடிப்பவர்களையே**
**தவறை சரிசெய்யும் பொறுப்பை**
**ஒப்படைத்தவுடன், என்றவுடன் அனைவரும்**
**அந்த ஓவியத்தில் எந்த குறையும் இல்லை**
**என ஓவியத்தை ரசித்து விட்டு சென்றுவிட்டனர்.**

**எனவே உன் திறமையில் முழு நம்பிக்கை வைத்து**
**பணியாற்று என்று அறிவுரை கூறினார்.**

அந்த இளைஞனும் எனது திறமையில் முழு
நம்பிக்கை வந்து விட்டது. உலகத்தையும்
மக்களையும் புரிந்துக் கொண்டேன்.
இனி அதற்கேற்றாற்போல்
நடந்துக் கொள்வேன் என்றான்.

குறை சொல்பவர்கள் சொல்லிக்கிட்டே
இருக்கட்டும். அவங்களால் அதை மட்டும்
தான் செய்ய முடியும். நாம் செய்கின்ற
வேலையில் நமக்கு மனநிறைவு
இருந்தாலே போதுமானது.

இதனையே வள்ளுவர்

**சொல்லுதல் யார்க்கும் எளியவாம், அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

எனக் கூறியுள்ளார்.

எனவே மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய வழியில்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்கள் ஆசியுடன்
நம் கடன் பணி செய்து கிடப்பதே
என்று ஏழை, எளிய நடுத்தர மக்களின்
வாழ்க்கை தரம் உயர்த்த தொடர்ந்து
பணியாற்றுவோம் என்று உறுதி கூறுகிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவர் நம் ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டே இருக்கிறார். எப்பொழுது பார்த்தாலும், நம்முடைய ஆட்சியை குறை சொல்வது தான் வழக்கம். அவர் எப்பொழுது பார்த்தாலும் ஒரு வசனத்தை பேசுவார், இது குதிரைபேர அரசு என்று சொல்வார். யாரை சொல்வார் என்று நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், விரைவிலே தீர்ப்பு வருவது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அப்பொழுது யாருடைய ஆட்சியிலே குதிரைபேரம் நடந்தது என்று நாட்டு மக்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஸ்டாலின் புதியபுதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்திருக்கின்றார். மழைக்காலங்களிலே சீதோஷ்ண நிலை மாறுகின்றது. அப்படி சீதோஷ்ணநிலை மாறுகின்றபொழுது, இன்றைக்கு பல்வேறு காய்ச்சல் பொதுமக்களுக்கு வருவது இயல்பு. பல ஆண்டுகளாக இப்படித்தான் வந்து கொண்டிருக்கின்றது, மக்களும் அதற்கு தகுந்த சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இப்பொழுது டெங்கு காய்ச்சல் வந்திருக்கின்றது. அந்தக் காய்ச்சலை வைத்து அவர் பேட்டி கொடுக்கும்பொழுது, இந்த ஆட்சி டெங்கு ஆட்சி என்று பெயர் சூட்டியிருக்கின்றார். ஆகவே அவருக்கு அவ்வளவுதான் திறமை, அவ்வளவு தான் புத்திசாலித்தனம் என்றுதான் நான் நினைக்கின்றேன். ஏனென்றால், காய்ச்சல் வருவது இயற்கை, அதை குணப்படுத்துவதற்கு என்ன ஆலோசனை என்று சொன்னால், அது உண்மையிலேயே எதிர்க்கட்சித்தலைவருக்கு பாராட்டிற்குரியது. அதை விட்டுவிட்டு, வேண்டுமென்றே கிண்டல் செய்வது, கேலி செய்வது , எந்த விதத்திலே நியாயம் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு விழிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. டெங்கு காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைகின்ற சூழ்நிலையை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம், அதற்குத் தேவையான வசதியையும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம், போதிய மருத்துவர்கள், செவிலியர்களை நியமித்திருக்கின்றோம். ஆகவே, இந்த டெங்கு கொசு கடித்துத்தான் டெங்கு காய்ச்சல் வருகிறது. டெங்கு கொசு நல்ல தண்ணீரில் தான் உருவாகிறது, பகலிலே கடிக்கின்றது. காய்ச்சல் வந்தவுடன்நாம் அரசு மருத்துவமனைக்கோ, தனியார் மருத்துவமனைக்கோ சென்று ரத்த பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்பதைக் கண்டறிந்து, உடனடியாக அதற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணமாகி விடும். இது இயல்பான ஒன்று. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் உத்தரவு வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, துறை செயலாளர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமித்து, அந்த மாவட்டத்திலே எங்கெங்கெல்லாம் டெங்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் கண்டறிந்து, அதற்கு தீர்வு காணுகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். டெங்கு காய்ச்சல் இன்றைக்கு படிப்படியாக குறைந்து கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மாவினுடைய அரசு விழிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த காய்ச்சலுக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இந்த டெங்கு கொசு நல்ல தண்ணீரில் உருவாகின்றது. ஆகவே, வருகை தந்திருக்கின்ற பொதுமக்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், நீங்கள் மக்களிடத்திலே விழிப்புணர்வு ஏற்படுத்த

வேண்டும். தாங்கள் சேமித்து வைக்கின்ற தண்ணீரை மூடிவைக்கவேண்டும். இல்லாவிட்டால், டெங்கு கொசு, அதில் முட்டையிட்டு அங்கே கொசு உற்பத்தியாகி இந்த காய்ச்சல் வருவதற்கு காரணமாகி விடும். ஆகவே, இதை தடுப்பதற்கு பொதுமக்கள் முழுமையாக ஒத்துழைப்பு தரவேண்டும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் எந்த திட்த்தையும் நிறைவேற்ற இயலாது. டெங்கு கொசு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டுமென்று சொன்னால், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு அரசுக்கு தேவை, அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் டெங்கு கொசு முற்றிலும் ஒழிப்போம், டெங்கு காய்ச்சலை தடுப்போம் என்று இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.ஆட்சியிலும் சரி, புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலும் சரி, எண்ணற்ற திட்டங்களை நாம் செயல்படுத்தியிருக்கின்றோம். அதே நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்தது என்று எண்ணிப் பாருங்கள். அவர்கள் என்ன செய்தார்கள், நம்முடைய இருபெரும் தலைவர்கள் இந்த நாட்டிற்கு என்ன செய்தார்கள் என்று ஒப்பிட்டுப் பாருங்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு முன்னாலே பேசிய உங்கள் மாவட்ட அமைச்சர் கூறினார், அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள், அதனால் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் ஏராளம் என்று பட்டியலிட்டு சொன்னார்கள். திமுக ஆட்சியில் ஒன்றையாவது சொல்லமுடியுமா? எண்ணிப் பாருங்கள். ஆகவே, இருபெரும் தலைவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை கொடுத்ததன் மூலம் இந்த மாவட்டம் வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்திலே இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் அதில் பங்கு பெற்றது. அப்பொழுது காவிரி நதிநீர் பிரச்சினை வந்தது, அதற்காக குரல் கொடுத்தார்களா? காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? இல்லை. ஆட்சி அதிகாரத்திலே, பதவி சுகத்தைக் கண்டார்கள், இந்தெந்த இலாகா வேண்டுமென்று கேட்டு பெற்றார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்களைப் பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை. ஆனால் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி இன்றைக்கு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உச்சநீதிமன்றத்தின் மூலமாக நமக்கு கிடைத்தது. ஆகவே, திருச்சிராப்பள்ளி மாவட்டம் விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. காவிரி நீர் பாசனம் பெறுகின்ற பகுதியாக இருக்கின்றது. அந்த மக்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மூலமாக புரட்சித்தலைவி அம்மா சட்டப் போராட்டம் நடத்தி, நமக்கு தீர்வு தந்த ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**(திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான புதிய அறிவுப்புகள்)**

விழா முடிந்து பொதுமக்களும், தொண்டர்களும், மகளிரும், இளைஞர்களும், பத்திரமாக
வீடுபோய்ச் சேரவேண்டும்.
குறிப்பாக வாகனத்தில் செல்பவர்கள்
கவனமாக செல்லவேண்டுமென்று
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா இன்றைக்கு சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் இன்றைக்கு திருச்சிராப்பள்ளி நகரத்திலே மிக விமரிசையாக, எழுச்சியாக நடைபெற உறுதுணையாக இருந்து மாவட்ட அமைச்சர்கள், மரியாதைக்குரிய அண்ணன் வெல்லமண்டி நடராஜன் அவர்களுக்கும், மரியாதைக்குரிய சகோதரி வளர்மதி அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அவரோடு இணைந்து பணியாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசுப் அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆரம்பித்த உடனேயே அருமைச் சகோதரர் முன்னாள் அமைச்சர் சிவபதி அவர்கள் எம்.ஜி.ஆர் அணி சார்பாக அகில இந்திய கபடிப் போட்டியை இந்த திருச்சிராப்பள்ளி நகரத்திலே நடத்தி இன்றைக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு பெருமை சேர்த்தார். அவருக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.
நேற்றும் நமதே!
இன்றும் நமதே!
நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

## திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்

**1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கொட்டப்பட்டு கிராமத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க கலந்தாலோசகர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை தற்போது தொழில் நுட்ப மற்றும் நிதி மதிப்பீடு கூர்ந்தாய்வு செய்து உரிய வணிக முறையை (Business Model) முடிவுள செய்து செயல்படுத்தப்படும்.

**2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை___ மூலம் கட்டப்படவிருக்கும் பாலங்கள்**

- திருச்சி–சிதம்பரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கல்லக்குடி – தாப்பாய் சாலையிலுள்ள காட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்படும்.
- ஏரகுடி–மகாதேவி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- துலுக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- தண்டலை–திருத்தலையூர் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- சமயபுரம் – கீழக்கண்ணுகுளம் (வழி) மண்ணச்சநல்லூர் – திருப்பஞ்சிலி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- துவரங்குறிச்சி–அடைக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- இலுப்பூர்–வளநாடு சாலையில் ஒரு பாலம்
- புடலாத்தி–மாராடி–கோட்டப்பாளையம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- கொப்பம்பட்டி – விஸ்வாம்பாள் சமுத்திரம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

- பைத்தம்பாறை–சேருகுடி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- வாளவந்தி–துலையாநத்தம் (வழி) மங்களம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

**3. காட்டூர்–இலால்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்**

சென்னை–திருச்சிராப்பள்ளி வழித்தடத்தில் காட்டூர் மற்றும் இலால்குடி இரயில் நிலையங்களுக்கிடையே தற்போதுள்ள இரயில்வே கடவு எண்.226க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**4. திருவெறும்பூர் இரயில் நிலையம் அருகில் சாலை மேம்பாலம்**

திருச்சிராப்பள்ளி – கீழ்கல்கண்டார்கோட்டை சாலையில், மஞ்சத்திடல்–திருவெறும்பூர் இரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண்.323க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**5. ஸ்ரீரங்கம் – திருச்சி டவுன் இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம்**

காவேரி சாலையிலுள்ள இரயில்வே கடவு எண்.249க்கு பதிலாக ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சி டவுன் இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**6. துறையூருக்கு புறவழிச்சாலை**

துறையூர் நகரத்திற்கு இரண்டாம் கட்ட புறவழிச்சாலை அமைக்கப்படும்.

**7. திருச்சி–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல்**

திருச்சி முதல் நாமக்கல் வரை 77 கிலோ மீட்டர் நீளமுள்ள (மாநில நெடுஞ்சாலை எண்.25) சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த கொள்கை அளவில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் 12.5.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இச்சாலையினை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் மீது தேசிய நெடுஞ்சாலை அலகு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8. மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பயணியர் விடுதியை புதுப்பித்தல்**

மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பழமை வாய்ந்த பயணியர் விடுதி பழுது நீக்கி புதுப்பிக்கப்படும்.

**9. மக்கள் நல்வாழ்வுத்துறை முலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்**

- கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் லால்குடி, முசிறி, மணப்பாறை, ஸ்ரீரங்கம் மற்றும் துறையூர் மருத்துவமனைகளில் மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதலுதவி அளிக்க ஏதுவாக மாரடைப்பு சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

- கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்து எதிர் வீரிய காச நோய் வார்டு ஏற்படுத்தப்படும்.

- திருச்சிராப்பள்ளி நகரில் ஒரு புதிய மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

- மணப்பாறை அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், ஆய்வக கருவிகள், டயாலிசிஸ் கருவி, எண்டோஸ்கோப் கருவி, புற்றுநோயாளி கீமோதெரபி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- மணப்பாறை வட்டத்தில் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவை திட்டம் செயல்படுத்தப்படும்.

- இனாம்குளத்தூர் வட்டத்தில் கண் சிகிச்சை பிரிவு அமைக்கப்படும்.

- நாவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**